# 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம் !

கர்த்தர் உங்களை பெறுக்கமாக ஆசீர்வதிப்பாராக !

**கி**றிஸ்தவ மார்க்கத்திலே, ஆண்டவருடைய கிருபை என்ற ஒரு விசேஷமானக் கொள்கை ஒன்று உண்டு. மனிதர்களுக்கு இந்த கிருபை மிகவும் தேவைப்படுகிறது. மனிதன் பாவத்திலே பிறந்திருக்கிறான், அவன் பாவத்திலே வளருகிறான். பரிசுத்தமாக வாழவேண்டும் என்ற எண்ணத் தோடு, எத்தனைமுறைதான் அவன் பிரயாசப்பட்டாலும், திரும்ப திரும்ப அவன் பாவ குழியிலே விழுகிறான்.

ஆகவே மனிதனுடைய தேவை என்ன? அந்த தேவ கிருபையே! ஆண்டவர் நமக்கு இறங்கவேண்டும், அவர் நம்மீது கிருபையாக இருக்க வேண்டும் என்ற பெரும் ஆவல் நமக்கு இருக்கவேண்டும். இந்த உலகத்தின் மக்கள் அனைவருக்கும் கிருபை உண்டு. எப்படிப்பட்ட பாவம் செய்தவர்களுக்கும், எத்தனை அநியாயம் செய்தவர்களுக்கும் தேவனுடைய அந்த கிருபை பெரிதாக நமக்கு கொடுக்கப்படுகிறது.

**யூ**த ஜாதிகளுக்கு தேவ கிருபை மிக அதிகமாக கொடுக்கப் பட்டது. ஆண்டவர் இந்த **யூ**த ஜாதிகளை, தம்முடைய பிள்ளைகளாக தேர்ந்தெடுத்தார்.

ஒரு காலத்திலே ரஷிய அரசன் ஒருவன் கிறிஸ்தவனாக இருந்தான். ஒரு நாள், மந்திரிகள் மத்தியிலே ஒரு கேள்வி கேட்டான். வேதாகமம் உண்மை என்று நிருபிப்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்று கேட்டான். அங்கிருந்த ஒரு பெரியவர் " **யூ**தர்கள் " என்று பதிலளித்தார். **யூ**தர்கள் எப்படி இருந்தார்கள்? என்ன செய்தார்கள்? எவ்வாறு அவர்களுடைய வாழ்க்கை இருந்தது என்பதெல்லாம் இந்த வேதபுத்தகத்தில்தான் தேவனால் எழதப்பட்டிருக்கிறது.

ஆதியிலே ஆதாம் ஏவாள் பாவம் செய்தார்கள், பிறகு அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தது. முதலாவது காயீன் இரண்டாவது ஆபேல். காயீன் ஆபேலை கொன்றுப்போட்டான். ஆகவே ஆண்டவர் மூன்றாவது குழந்தையாக சேத் என்ற மகனை கொடுத்தார். இந்த சேத்தின் சந்ததி கடவுளுடைய பிள்ளைகளாக வளர்ந்தார்கள்.

-1-

அந்த காயீனுடைய சந்ததி இந்த உலகபிரகாரமான பிள்ளைகளாக வளர்ந்தார்கள். கடவுளுக்கு விரோதமான பாவங்களை செய்து உலகத்தாரை போல வாழ்ந்தார்கள். சேத்தினுடைய சந்ததி தேவனுக்கு பயந்து தேவனுடைய பிள்ளைகளாக வாழ்ந்தார்கள். காயீனுடைய பிள்ளைகள் உலக மெங்கும் பரவி வாழ்ந்தபோது, ஆர்ப்பாட்டங்களும் ஆடல் பாடல்களும், பலவிதமாக தங்களை அலங்கரித்துகொண்டும், தங்களது ஆடைகளை ஆபாசமாக அணிந்துக்கொள்வதுமாக இருந்தார்கள்.

இப்படிப்பட்ட சந்ததியிலிருந்து தேவனுடைய பிள்ளைகள் தணித்து வாழவேண்டும் என்று எண்ணி மலைகளிலே வாழ்ந் தார்கள் என்று வேதம் சொல்லுகிறது. ஆகவே சேத் வம்சத்தார் மலைகளிலும் காயீனின் வம்சத்தார் பள்ளத்தாக்கிலும் வாழ்ந்தார்கள்.

**"தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள்."**
**-ஆதி 6:2.**

இங்கு தேவகுமாரர்கள் என்றால், சேத்தினுடைய வம்சத்தார் என்று அர்த்தமாகிறது. அவர்கள் மலைகளிலிருந்து கீழே வந்து காயீனுடைய பிள்ளைகளோடே பழகி திருமனம் செய்து கொண் டார்கள் என்று வேதம் சொல்லுகிறது. அதனாலே பெறும் பாவம் பெறுகினது. அப்படி பாவம் பெறுகினபடியால் ஆண்டவர் ஜலபிரள யத்தை அனுப்பி அவர்களை அழிக்க நேரிட்டது. ஜலபிரளயத்தில் நோவாவும் மற்றும் தன்னுடைய மூன்று பிள்ளைகளும் தப்புவிக்கப் பட்டார்கள். அந்த மூன்று பிள்ளைகள் சேம், காம், யாபேத் என்பவர்களாலே இந்த உலகம் மறுபடியுமாக நிரம்பிற்று.

அந்த நோவாவின் சந்ததியிலிருந்து பதினான்கு தலைமுறை கழித்து ஆபிரகாம் என்ற கர்த்தருடைய பிள்ளை இருந்தான். அவன் நீதிமானாய் இருந்தான். ஆகவே கர்த்தர் அவனை தெரிந் தெடுத்து, அவனை ஆசீர்வதித்து, அவனோடுக்கூட உடன்படிக்கைச் செய்தார். உன்னுடைய பிள்ளைகளை நான் ஆசீர்வதிப்பேன், உன்னுடைய வம்சத்தை நான் எனக்காக தெரிந்துகொண்டு என்னுடைய பிள்ளைகளாக நான் விசேஷமாக தெரிந்துகொள்வேன் என்று சொன் னார்.

அப்படியானால் அந்த பிள்ளைகளை தன்னுடைய பிள்ளைகளாக தெரிந்துகொண்டு, தன்னுடைய கற்பனைகளை கொடுத்து, தன்னுடைய நியாயங்களை கொடுத்து, தனக்கு அவர்கள் பிரதிநிதியாகவும், ஆசாரியர்களாகவும் தன்னை பற்றின அறிவை



உலகத்தாருக்கு கொடு க்கும்படியாகவும் அந்த ஆபிரகாமின் சந்ததியை ஆண்டவர் தெரிந்துக் கொண்டார்.

ஆபிரகாமின் சந்ததியில்தான் இஸ்ரவேலர் வந்தார்கள். அந்த இஸ்ரவேலரிடத்திலிருந்துதான் பண்ணிரெண்டு கோத்திரங்கள் வந்தது. அந்த பண்ணிரெண்டு கோத்திரங்களில், பத்து கோத்திரங்கள் தேவனை விட்டு பாகால் தெய்வத்தை பின்பற்றி போனபோது, **யூ**தா கோத்திரத்தில் ஒரு கோத்திரமும், பென்யமீன் கோத்திரத்தில் அரை கோத்திரத்தாரும் சேர்ந்து ஆண்டவருக்கு உண்மையாக இருந்தார்கள்.

ஆகவே இந்த ஒன்றரை கோத்திரத்தாருக்குதான் **யூ**தர்கள் என்ற பெயர் வந்தது. இந்த **யூ**தர்கள் உலகம் முழுவதும் கடவுளுக்கு விரோ தமாக நடந்துக்கொண்டிருந்தபோது ஆண்டவருக்கு மனஸ்தாபமாக இருந்தது. என்றாலும் அந்த **யூ**தர்களை ஆசீர்வதித்தார், கிருபையாக இருந்தார், வழி நடத்தினார்.

ஆனாலும் அந்த **யூ**தர்கள் ஆண்டவரை மறந்துபோனார்கள். ஆண்டவர்
கொடுத்த பத்து கற்பனைகளில் நான்காவது கற்பனை, பரிசுத்த ஓய்வு நாளைக் குறிக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகர் என்றும், சிருஷ்டிகர் என்றும் சுட்டிகாட்டுகிறது. ஆறு நாட்களுக்குள்ளே ஆண்டவர் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார், அந்த சிருஷ்டிப்பின் ஞாபகமாகவும், கிறிஸ்துவின் சின்னமாகவும் அவர் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். அந்த ஏழாம் நாளில் ஓய்ந்திருக்கிற பிள்ளைகள் இந்த உலகத்தை படைத்தவரை வணங்குகிறார்கள், சேவிக்கிறார்கள், தொழுகிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது.

சாத்தான் அந்த ஓய்வுநாளை கடைப்பிடிக்கிறவர்களுக்கு பெறும் தொல்லைகள் கொடுத்துவருகிறான். அந்த பரிசுத்தமான ஓய்வுநாளின் ஆசரிப்பை அழித்துவிட்டால், மற்ற தெய்வங்களை **யூ**தர்கள் வணங்கு வார்கள் என்றுச் சொல்லி, சாத்தான் அந்த ஓய்வுநாளை பரிசுத்தக் குலைச்சலாக்கிவிட்டான்.

அதை சரியாக கைக்கொள்ளாதபடி ஒரு குழப்பத்தை அதன் மத்தியிலே வைத்தான். அதனால், அந்த **யூ**தர்கள் பாகால் தெய்வத்தையும் மற்ற தெய்வத்தையும் வணங்க ஆரம்பித்தார்கள். அப்படி அவர்கள் வணங்க ஆரம்பித்தபோது ஆண்டவர் தீர்க்கதரிசிகளை அனுப்பி கடிந்து கொண்டார். எத்தனையோ தூதுகளை அனுப்பி அவர்களை எச்சரித்தார். ஆனால் அவர்கள் அடிக்கடி அவரின் தூதுகளை மறந்து, வேறு தெய்வங்களை வணங்கிகொண்டிருந்தார்கள். இப்படி அவர்கள் செய்த படியால், ஆண்டவர் தாம் தெரிந்துகொண்ட மக்களை அநேக



புறஜாதிகளின் மத்தியிலே அடிமைகளாக போகும்படி செய்தார் என்று வேதத்தில் அநேக இடத்தில் சொல்லப்பட்டிக்கிறது. 400 வருஷம் அந்த எகிப்தில் அடிமைகளாக இருந்தார்கள். பிறகு பெலிஸ்தியர்கள், மேதியானியர், அமெலக்கியர், இப்படிப்பட்ட அந்நிய தெய்வத்தை வணங்கும் புறஜாதியர்களோடு அடிமைகளாக இருந்து, அநேக வருஷங்கள் இருந்து வந்தார்கள்.

எத்தனையோ முறை அவர்களை மன்னித்தார். **யூ**த சரித்திரத் திலே எத்தனையோ முறை திரும்ப திரும்ப அவர்கள் பாவம் செய் வதும், ஆண்டவர் இறக்கம் காட்டி விடுதலை செய்வதும், திரும்ப அவர்கள் பாவம் செய்வதும் என்று, இப்படியாக அவர்கள் சரித்திரம் போய்க்கொண்டேயிருந்தது.

எவ்வளவு நாளைக்கு இப்படி நடக்கும் என்ற ஒரு பெரிய கேள்வி இருந்து வந்தது. எவ்வளவு நாளைக்கு ஆண்டவர் அவர்களிடத்திலே இறக்கம் காட்டுவார்? எவ்வளவு நாளைக்கு ஆண்டவர் அவர்களிடத்திலே கிருபையாக இறங்குவார்?

தானியேல் தீர்க்கதரிசியின் காலத்திலே கடைசியாக, அந்த **யூ**தர்கள் நேபுகாத்நேச்சாரால் சிறைப்பிடிக்கப்பட்டு பாபிலோன் தேசத்திலே அடிமைகளாக இருந்தார்கள். அப்பொழுது எரேமியா தீர்க்கதரிசி, அந்த ஜனங்களின் மத்தியிலே வந்து தீர்க்கதரிசனமாக... **இந்தத் தேசமெல்லாம் வனாந்தரமும் பாழுமாகும்; இந்த ஜாதிகளோ, எழுபது வருஷமாகப் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பார்கள். எழுபது வருஷம் நிறைவேறினபின்பு, நான் பாபிலோன் ராஜாவினிடத்திலும், அந்த ஜாதியினிடத்திலும், கல்தேயருடைய தேசத்தினிடத்திலும், அவர்களுடைய அக்கிரமத்தை விசாரித்து, அதை நித்தியபாழிடமாக்கி, -எரேமியா 25.11,12.**

எழுபது வருஷம் அந்த பாபிலோன் ராஜாவை சேவிப்பார்கள் என்று கர்த்தர் சொன்னார். இந்த அடிமைத்தனத்தை

குறித்து ஆண்டவர் அநேக வசனத்தில் சொல்லியிருக்கிறார். எரேமியா 29:1,10,12,13. 2நாளாகமம் 36:21. எரேமியா 21:28.

இப்படியாக இந்த வசனங்களிளெல்லாம், எழுபது ஆண்டு சிறையிருப்பைப்பற்றி ஆண்டவர் பேசுகிறார். இந்த எழுபது ஆண்டுகளில் தானியேலும் அந்த ராஜாவை சேவித்தான். அவன் அங்கு பிரதமமந்திரியாக இருந்தான். பிறகு அந்த பாபிலோன் முடிந்து மேதிய பெர்ஸிய ராஜ்யம் அரசாண்டது. அப்பொழுது 68 வருஷம் முடிந்த நிலையிலிருந்தது. இனி 2 வருஷம்தான் இருக்கிறது. யூதர்கள் திரும்ப திரும்ப பாவம் கொண்டிருந்தபடியால் தானியேல் தீர்க்கதரிசியும் அவருடைய நன்பர்களும் ஆண்டவரை



நோக்கி மன்றாடி, இந்த 2 வருஷத்தில் அந்த எழுபது ஆண்டு சிறையிருப்பு முடிந்து, யூதர்கள் திரும்ப தங்களுடைய நாட்டிற்கு போக வேண்டும் என்று உபவாசித்து ஜெபித்தார்கள். தானியேல் எப்படி ஜெபித்தார் என்றால்,

**"ஆண்டவரே கேளும், ஆண்டவரே மன்னியும், ஆண்டவரே கவனியும்; என் தேவனே, உம்முடைய நிமித்தமாக அதைத் தாமதியாமல் செய்யும்; உம்முடைய நகரத்துக்கும் உம்முடைய ஜனத்துக்கும் உம்முடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறதே என்றேன். இப்படி நான் சொல்லி, ஜெபம்பண்ணி, என் பாவத்தையும் என் ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தையும் அறிக்கையிட்டு, என் தேவனுடைய பரிசுத்த பர்வதத்துக்காக என் விண்ணப்பத்தை என் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாகச் செலுத்திக்கொண்டிருந்தேன். -தானியேல் 9:19,20.**

தேவனுடைய ஆலயம் திரும்ப கட்டப்படவேண்டும் என்று அதிகமாக அவன் ஜெபித்துகொண்டிருந்தான். அப்பொழுது தானியேலுக்கு ஒரு தரிசனம் கிடைத்தது.

**"பரிசுத்தவானாகிய ஒருவன் பேசக்கேட்டேன்; அப்பொழுது வேறொரு பரிசுத்தவான் பேசினவரை நோக்கி: அன்றாட பலியைக்குறித்தும், பாழ்க்கடிப்பை உண்டாக்கும் பாதகத்தைக்குறித்தும், பரிசுத்த ஸ்தலமும் சேனையும் மிதிபட ஒப்புக் கொடுக்கப்படுவதைக்குறித்தும், உண்டான தரிசனம் எதுவரைக்கும் இருக்கும் என்று கேட்டான். அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும், பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான்."**
**-தானியேல் 8:13,14.**

ஆண்டவருடைய நகரம் கட்டப்படுவதுமட்டுமல்ல, பரிசுத்தஸ்தலம் (ஆலயம்) திரும்ப கட்டப்படவேண்டும் என்று அதிகமாக ஜெபித்ததினால் அவனுக்கு அதைகுறித்து தரிசனம் கொடுக்கப்பட்டது. அந்த பரிசுத்த ஸ்தலம், 2300 இராப்பகல் சென்று சுத்திரிக்கப்படும் என்று அந்த தேவ தூதன் கூறினான். தீர்க்கதரிசனபடி ஒரு நாள் என்றால் ஒரு வருஷம் என்று கணக்காகிறது.

**"நீ இவைகளை நிறைவேற்றினபின்பு, மறுபடியும் உன் வலதுபக்கமாய் ஒருக்களித்து, யூதா வம்சத்தாரின் அக்கிரமத்தை நாற்பதுநாள் வரைக்கும் சுமக்கவேண்டும்; ஒவ்வொரு வருஷத்துக்குப்பதிலாக ஒவ்வொரு நாளை உனக்குக் கட்டளையிட்டேன்."**
**-எசேக்கியேல் 4:6.**

**நீங்கள் தேசத்தை சுற்றிப்பார்த்த நாற்பதுநாள் இலக்கத்தின்படியே, ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக, நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து, என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள்." - எண்ணாகமம் 14:34.**

ஆகவே 2300 இராப்பகல் என்றால், 2300 வருஷம் என்று அர்த்தமாகிறது. இந்த பாபிலோன் சிறையிருப்பிலிருந்து விடுதலையாகி போவதற்கு, ஆண்டவர் முன்பே சொன்ன அந்த எழுபது வருஷத்திலே இன்னும் இரண்டு வருஷம் தானே இருக்கிறது. இந்த இரண்டு வருஷம் இருப்பதற்கு பதிலாக ஆண்டவர் இப்பொழுது 2300 வருஷம் கடந்துபோகும் என்று சொல்லுகிறாரே அது என்ன?



என்று சொல்லி தானியேல் கலங்கி புசிக்காமலும் குடிக்காமலும் அழுது ஜெபித்தான்.

**"அப்படி நான், ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கும்போதே, முதல் தரிசனத்திலே நான் கண்ட புருஷனாகிய காபிரியேல், வேகமாய்ப் பறந்துவந்து, அந்திப்பலியின் நேரமாகிய வேளையிலே என்னைத் தொட்டான். அவன் எனக்குத் தெளிவுண்டாக்கி, என்னோடே பேசி: தானியேலே, உனக்கு அறிவை உணர்த்தும்படி இப்போது புறப்பட்டுவந்தேன். நீ மிகவும் பிரியமானவன். ஆதலால், நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது. நான் அதை அறிவிக்கவந்தேன்; இப்போதும் சொல்லுகிற அர்த்தத்தையும் நீ கவனித்துக்கேட்டு, தரிசனத்தை அறிந்துகொள். மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவிர்த்திபண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும், தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும், மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணு கிறதற்கும், உன் ஜனத்தின்மேலும் உன் பரிசுத்த நகரத்தின்மேலும் எழுபதுவாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது."**
**-தானியேல் 9:21-24.**

யூதர்கள் விடுதலையடைய எழுபது வாரங்கள் செல்லும் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

**"இப்போதும் நீ அறிந்து உணர்ந்துகொள்ளவேண்டியது என்னவென்றால்: எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக்கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்; அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும். அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல; நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள்; அதின்முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும்; முடிவுபரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது. அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும்**

**காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்; அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான்." - தானி. 9:25,26,27.**

இங்கு ஆண்டவர் இரண்டு திட்டவட்டமான தீர்க்க தரிசனத்தை நமக்கு கொடுக்கிறார்.

## 2300 இராப்பகல்

உனக்கும் உன் ஜனத்திற்கும் எழுபது வாரங்கள் குறிக்கப்பட்டிருக்கிறது என்று ஆண்டவர் சொல்லுகிறார். அப்படி யானால் **யூ**த ஜனங்களுக்கு எழுபது வாரங்கள் ஆண்டவர் தவனையாக கொடுத்தார். அந்த எழுபது வாரங்கள் சென்ற பிறகு **யூ**த ஜனங்கள் தன்னுடைய (தேவனுடைய) சொந்த ஜனங்களாக இல்லாமல் தள்ளப்பட்டுப் போவார்கள் என்று வேதம் கூறுகிறது.

**இந்த எழுபது வாரங்கள் என்றால் என்ன?**



ஒரு வாரத்திற்கு ஏழு நாட்களாகிறுது. ஏழை, எழுபதால் பெறுக்கினால் நானூற்றி தொன்னூறு நாட்கள் ஆகிறது. அதாவது நானூற்றி தொன்னூறு வருஷம் ஆகிறது. பின்பு அந்த வருஷத்தின் முடிவின் துவக்கத்திலிருந்து 2300 இராப்பகல் அதாவது 2300 வருஷங்கள் கழித்து, பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும். ஆகவே இந்த காரியத்தை ஆண்டவர் தீர்க்கதரிசனமாக சொன்னார்.

பாபிலோன் ராஜாக்கள் ஆண்டு, மேதிய பெர்ஸியர் ராஜாக்கள் வந்தார்கள். மேதிய பெர்ஸியர் ராஜாக்கள் அங்கு வந்தபோது தேவனுடைய பிள்ளைகளின் வேண்டுதலின் பேரில், எருசலேமை திரும்ப கட்டுவதற் காக மூன்று ராஜாக்கள் கட்டளைக் கொடுத்தார்கள்.

அந்த காலத்திலே அசிரியா, எகிப்து, பாபிலோன் நாட்டின் ராஜாக்கள் ஆண்டு கொண்டிருந்தபோது, அவர்களுடைய ஆளுகையை திட்டமாக நிர்மானிக்க, டாலமி என்று சொல்லப்பட்ட எகிப்திய ஞானி ஒரு காலண்டரை வைத்திருந்தார். அவர் அந்நாட்களிலே சரித்திர சம்பவங்களின் காலங்களைக் குறிப்பதற்காக கால அட்டவனை ஒன்றை வைத்திருந்தார்.

இயேசு கிறிஸ்து காலத்திலே, அஷர் என்று சொல்லப்பட்ட ஒரு விஞ்ஞானி அந்த காலத்தை கணித்து எந்த வருஷம் என்ன காரியம் நடந்தது என்று எழுதிவைத்திருந்தார். இவர்கள் இருவரும் எழுதி வைத்ததிலிருந்து சில காரியங்களை உங்களுக்கு சொல்லுகிறேன்.

சைரஸ் என்ற ஒரு ராஜா கி. மு 536–வது ஆண்டில் எருசலேமை எடுத்து கட்டும்படியாகக் கட்டளை கொடுத்தான்.

**"எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி, பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசுடைய முதலாம் வருஷத்திலே, கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினதினாலே அவன்: பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக்கட்டும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ, அவனோடே அவனுடைய தேவன் இருப்பாராக; அவன் யூதாவிலுள்ள எருசலேமுக்குப்போய், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டக்கடவன், எருசலேமில் வாசம்பண்ணுகிற தேவனே தேவன். அந்த ஜனங்களில மீதியாயிருக்கிறவன் எவ்விடத்தில் தங்கியிருக்கிறானோ, அவ்விடத்து ஜனங்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்துக்கென்று அவனிடத்தில் உற்சாகமாய்க் காணிக்கை கொடுத்து அனுப்புகிறதுமன்றி, அவனுக்குப் பொன் வெள்ளி முதலிய திரவியங்களையும், மிருக ஜீவன்களையும் கொடுத்து, உதவிசெய்யவேண்டும் என்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார் என்று தன் ராஜ்யமெங்கும் எழுதியனுப்பி விளம்பரம் பண்ணுவித்தான்." - எஸ்றா 1:1-4.**

பல தடங்களினாலே அந்த நகரம் எடுப்பித்து கட்டமுடியாமல் போய்விட்டது.



தரியு என்ற மன்னன் கி.மு 519–ம் ஆண்டிலே எருசலேமை எடுத்துக் கட்டும்படியாகக் கட்டளை கொடுத்தான். அதுவும் ஒரு பகுதிதான் நிறைவேறினது. அவர்கள் ஆலயத்தை கட்டமுடிந்தது, மற்றபடி தங்களுக்கு ஒரு சொந்த அரசாட்சி அவர்களுக்கு இல்லா மல் போய்விட்டது.

அர்த்தஸஸ்ட்டா என்ற ஒரு ராஜா கி.மு 477–ம் ஆண்டிலே எருசலேமை எடுத்துக் கட்டும்படியாகக் கட்டளை கொடுத்தான். அவனை பற்றி எஸ்ரா ஏழாம் அதிகாரம் முழுவதுதிலும் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவனின் காலத்திலே எருசலேம் நகரம் பூரணமாக கட்டப்பட்டது.
நம்முடைய காலண்டர் பிரகாரமாக பார்த்தோமென்றால் கி.மு 457 ம் ஆண்டில்தான் எருசலேம் நகரம் பூணமாக கட்டப்பட்டது. அந்த எருசலேம் மக்களுக்கு சுய ஆட்சி உரிமை வழங்கப்பட்டது. இன்று சரித்திர ஆசிரி யர்கள் எருசலேம் நகரம் கி.மு 457 ம் ஆண்டில் பூரணமாக கட்டப்பட்டது என்று சொல்லுகிறார்கள்.

எருசலேமை எழுப்பிக் கட்டுவதற்குக் கட்டளை கொடுத்த அந்த நாள் முதல் 2300 இராப்பகல் செல்லும். அந்த 2300 வருஷத்திலே எழுபது வாரங்கள் (490 வருஷங்கள்) உன் ஜனத்திற்காக குறிக்கப்பட்டிருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது. கி.மு 457 வருஷத்திலிருந்து 490 வருஷத்திற்கு கணக்கு பார்த்தால் கி.பி 34–ம் ஆண்டிலே முடிகிறது. 490–ல் 457 கழித்தால் இந்த கி.பி 34–ம் ஆண்டு வருகிறது. ஆகவே இந்த ஆண்டிலேதான் யூதர்களுக்கு தவணையின் காலம் முடிகிறது.

இந்த எழுபது வாரங்களை ஆண்டவர் இரண்டாக ஆக்கினார்.

**"இப்போதும் நீ அறிந்து உணர்ந்துகொள்ளவேண்டியது என்னவென்றால்: எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக்கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்; அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும். " - தானியேல் 9:25.**

இந்த ஏழு வாரம் எதைக்குறிக்கிறதென்றால், அந்த எருசலேமை எடுத்துக் கட்டுவதற்குரிய காலத்தை குறிக்கிறது. ஏழு வாரம் என்றால் 49 வருஷம் என்று கணக்காகிறது. மற்றும் அந்த அறுபத்திரண்டு வாரங்கள், 27–ஆம் ஆண்டிலே முடிகிறது. இந்த 27–ம் ஆண்டிலே பிரபுவாகிய மேசியா தோன்றுகிறார். அவர் தோன்றி,

**"அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல; நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள்**



**அழித்துப்போடுவார்கள்; அதின்முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும்; முடிவுபரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது." -தானியேல் 9:26.**

அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்கு பிறகு மேசியா சங்கரிக்கப்படுவார்.

**"ஆவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்; அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான்." -தானியேல் 9:27.**

மேசியா வந்து ஒரு வாரம் “ ஏழு வருஷம் ” யூத ஜனங்களுக்கு உடன்படிக்கைப் பண்ணுகிறார். அந்த ஏழு வருஷத்திலே, அந்த வாரத்தின் பாதி சென்றபோது “ மூன்றரை வருஷம் ” அவர் காணிக்கைகளையும் பலியையும் ஒழியப்பண்ணுவார். அவருடைய மரணத்தினாலே காணிக்கைகளையும், பலிகளையும் கல்வாரி சிலுவையில் ஒழிந்துபோயிற்று.

ஆகவே மேசியா தோன்றி மூன்றரை வருஷத்திலே சங்கரிக்கப் பட்டார். இந்த தீர்க்கதரிசனம் ஒரு விசேஷமானதொன்று. இன்றைக்கு இந்த தீர்க்கதரிசனத்தை ஆராய்ச்சி செய்கிற மக்கள் மிகவும் பிரமிக் கிறார்கள் மிகவும் ஆச்சரியப்படுகிறார்கள். இயேசு கிறிஸ்துவானவர் பிறக்கும்போது சாஸ்திரிகள் அந்த நட்சத்திரத்தை கண்டு யூதருக்கு ராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கே? என்று தேடிக் கொண்டுவந்தார்கள். ஆகவே உலகம் முழுவதும் பரவலாக ஒரு பெரிய ஜோதி பிறக்கப் போகிறது என்ற ஒரு எண்ணம், உலகத்தின் ஞானிகளின் மத்தியிலே இருந்தது.

சீனா நாட்டிலே 24–வது டைனாசிட்டி ஆண்டார். அந்த பெரிய மன்னன் கிழக்கிலே ஒரு பெரிய ஜோதி தோன்றினதை பார்த்து, தன்னுடைய அறிஞர்களிடத்திலே இந்த உலகத்தில் கிழக்கிலே ஒரு பெரிய ஜோதி உதயமாகிறது என்று சொன்னாரென்று சீனா சரித்திரத்திலே எழுதி வைக்கப்பட்டிருக்கிறது.

புத்தர் பிரானின் சிஷியர் ஒருவர் புத்தரிடத்திலே, தான் மரிக்கும்முன் ஒரு கேள்விக் கேட்டார். உங்களை ஆசியாவின் ஜோதி என்று சொல்லுகிறார்களே, இந்த உலகத்தில் வர போகிற ஜோதி நீர்தானா அல்லது இன்னொருவர் வரவேண்டுமா? என்று கேட்டதற்கு அந்த புத்தர் சொன்னார்: நான் ஆசிய ஜோதியல்ல, அந்த ஆசிய ஜோதி இனிமேல் இந்த உலகத்திற்கு வருவார் என்று சொன்னார். இது புத்தரின் சரித்திரத்திலே எழுதி வைக்கப்பட்டிருக்கிறது.

சாக்கிரடிஸ் என்பவரிடத்திலும், உலகத்தில் ஒரு பெரிய ஞானி வருவார் என்று எழதப்பட்டிருக்கிறதே, அவர் நீர்தானா? என்று கேட்டதற்கு, அவர் நான் அல்ல, அவர் இனிமேல்தான் வருவார் என்று சொல்லிவிட்டார்.



ஆகவே அந்த காலங்களிலே இந்த உலகத்தில் ஒரு பெரிய மகான் பிறப்பார் என்ற ஒரு எதிர்பார்த்தல், எல்லா நாடுகளிலும் இருந்தது என்று சரித்திரத்திலே வாசிக்கிறோம். அப்படி வாசிக்கும்போது, விசேஷமாக இந்த தீர்க்கதரிசனத்தை படித்த யூதர்கள் இந்த திட்டவட்டமான காலத்தில் மேசியாவாக

ஆண்டவர் பிறப்பார் என்று ஞானிகளும் அறிஞர்களும் அறிந்திருந்து, காத்திருந்தார்கள்.

மேசியா என்று சொன்னால், அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று அர்த்தம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது, தேவ ஆவியினாலே அபிஷேகம் பண்ணப்பட்டார். ஆவியானவர் அவரை அபிஷேகம் பண்ணினார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர் ஞானஸ்நானம் பெற்ற போது அவர் மேசியாவாக அபிஷேகம் பண்ணப்பட்டு மூன்றரை வருஷம்தான் உயிரோடி ருந்தார். எவ்வளவு கணக்காக கச்சிதமாக தேவனுடைய வாழ்க் கையை பற்றி தீர்க்கதரிசனமாக எழுதப்பட்டிருக்கிறது என்று பாருங்கள்.

அப்போதுதான் **யூ**தர்களின் தவணையின் காலம் அந்த முப்பத்தி நான்காவது ஆண்டோடே முடிந்துவிட்டது மட்டுமல்ல அவர் புறஜாதிகளிடத்திலே போய்விட்டார்.

**"அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்தியஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக்கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம். நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள்." -அப்போஸ்தலர் 13:46, 47.**

தேவனுடைய சொந்த ஜனங்கள் என்று அழைக்கப்பட்ட அந்த அந்தஸ்து, உரிமை, அந்த கி.பி **34–**வது ஆண்டோடு முடிந்து விடுகிறது என்று திருமறை சொல்லுகிறது. ஆண்டவர் அந்த **34–**வது ஆண்டிலே, **யூ**தர்களை தன்னுடைய சொந்த ஜாதி, ஜனம் இல்லாதபடி தள்ளிவிட்டார். அவரை விசுவாசிக்கிறவர்கள் எவர்களோ, அவர்கள் யாவரும் தம்முடைய சொந்த ஜனங்களாக ஆண்டவர் ஏற்றுக்கொண்டார் என்று வேதம் நமக்கு சொல்லுகிறது.

ஆண்டவருக்கு பின்பு **27–**வது ஆண்டு என்று சொல்லுகிறோமே, அந்த கணக்கு என்ன?

திருமறையின் பிரகாரமாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது, அவருக்கு **30** வயது என்று லூக்கா



**3.23–**ல் வாசிக்கிறோம். இதை குறித்து ஞானிகள் விளக்கம் கொடுத்திருக் கிறார்கள். அஸர், தன்னுடைய காலக் கணக்கை கனித்தபோது, மூன்றரை வருஷத்தைக் கணக்கில் சேர்க்காமல் விட்டுவிட்டார். அப்படியானால் இயேசு கிறிஸ்து இந்த கணக்கு பிரகாரம் கி.மு **4–**வது வருஷத்திலே பிறந்தார். இன்றைக்கு இயேசு கிறிஸ்து பிறந்து ( இன்றைய வருஷம் **2006** ) **2010** வருஷங்கள் ஆகிறது. இந்தக் காலண்டரிலே வருஷங்கள் சற்று தவறி வந்திருக்கிறது.

முனபு கணக்கு பார்த்த விஞ்ஞானிகள், ஒரு வருஷத்திற்கு **365** நாள் வருகிறது என்று கணக்கு பார்த்தார்கள். ஆனால் உண்மையாகவே **365–**ந்தே காலுக்கு மேலாக இருக்கிறது ஒரு வருஷம்.

கிரேகூறி என்பவர் இந்த காலண்டவரை கணக்கு பார்த்து ஒரு **15** நாட்களை சரி செய்தார். செவ்வாய் **4–**ம் தேதி என்று சொல்லப்பட்ட நாள், புதன் கிழமை **20–**ம் தேதியாக ஆக்கிவிட்டார். ஆனால் வார கணக்குளில் வித்தியாசம் இல்லை. இந்த உலக தோற்றத்திலிருந்து வாரத்தில் எந்த தவறுமில்லை. ஆகவே அந்த பரிசுத்த ஓய்வு நாளிலே மாற்றம் எதுவும் கிடையாது. வருஷத்திலேயும் மாதத்திலேயும்தான் சில மாற்றங்கள் ஏற்பட்டது.

ஆகவே **யூ**தர்களுக்கு இந்த **34–**வது வருஷத்திலே தவணையின் காலம் முடிந்துவிட்டது. இந்த **34–**வது வருஷத்தோடே அந்த எழுபது வாரங்கள் முடிந்துபோனது. இந்த எழுபது வாரங்கள் முடிந்தவுடனே ( **490** வருஷம் ) மீதம் **1810** வருஷம் இருக்கிறது. அப்படியானால் அந்த **457** லிருந்து இந்த **2300** வருஷத்தை கழித்தால் **1844–**ம் ஆண்டுக்கு வருகிறது. **<u>இந்த 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம் 1844–ம் ஆண்டு முடிகிறது.</u>**

அப்படி இந்த **2300** இராப்பகல் முடியும்போது, பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படுகிறது. பரிசுத்த ஸ்தலம் என்றால் ஆண்டவருடைய ஆலயம். அந்த நாட்களிலே ஆண்டவருடைய ஆலயம் கூடாரத்திலே இருந்தது. அந்த கூடாரத்தின் பெயர் ஆசரிப்புக்கூடாரம்.

**"அவர்கள் நடுவிலே நான் வாசம் பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக." -யாத். 25:8.**

அண்டசராசரங்களின் தேவனாகிய ஆண்டவர், பரலோகத்திலே இருப்பது மாத்திரம் அவருக்கு பிரியமில்லை. தன்னுடைய பிள்ளைகள் மத்தியிலே இருக்கவேண்டுமென்று அவர் விரும்பினார். ஆகவே அந்த மக்கள், கூடாரத்தை போட்டு வாசம் செய்தபோது, ஆண்டவரும் எனக்கு ஒரு கூடாரத்தை போடு, நான் அதிலே வாசம் பண்ணுவேன் என்று சொன்னார்.

அதேபோலவே ஆண்டவருக்கு ஒரு கூடாரத்தை ஜனங்கள் மத்தியிலே போட்டார்கள். அந்த இஸ்ரவேல் ஜனங்கள் வனாந் திரத்திலே இருந்தபோதெல்லாம், ஆண்டவருடைய கூடாரம்தான் மத்தியிலே இருந்தது. அதற்கு கிழக்கே, வடக்கே, மேற்கே, தெற்கே மூன்று கோத்திரத்தார், கூடாரம் போட்டு தங்கியிருந்தார்கள். அதன் மத்தியிலே தேவனுடைய ஆலயம் இருந்தது.

**"மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு." -யாத். 25:40.**

பரலோகத்தில் ஒரு ஆலயம் இருக்கிறது. அந்த ஆலயத்தின் சாயலாக இந்த ஆலயத்தை நீ கட்டு என்று, அங்கு ஆண்டவர் சொன்னார்.

## இந்த பரிசுத்த ஸ்தலம் எப்படியிருந்தது?

அந்த ஆசரிப்பு கூடாரத்திலே, இரண்டு அறைகள் இருந்தது. அந்த ஆலயத்தின் முன்பாக ஒரு பலிபீடம் இருந்தது. அந்த பலிபீடத்திற்கு முன்னதாக ஒரு தொட்டி இருந்தது. அந்த தொட்டியிலே தண்ணீர் இருந்தது. ஆசாரியர்கள் வரும்போது தங்களுடைய கால்களை அந்த தொட்டியில் கழுவிக் கொண்டு வந்து, ஆலயத்திற்கு முன்பாக இருந்த ஆட்டு குட்டிகளை தகனம் பண்ணுவார்கள்.

பிறகு அந்த ஆலயத்திற்குள்ளாக வரும்போது, அந்த முதல் அறை பரிசுத்த ஸ்தலம் என்று சொல்லப்படும். இரண்டாவது அறை மகா பரிசுத்தஸ்தலம் என்று சொல்லப்படும். இந்த ஆலயத்திலே இரண்டு விசேஷமான ஆராதனைகள் நடந்துகொண்டிருந்தன. யாத்திரையாகமம், லேவியராகமம் என்ற புஸ்தங்களிலே அந்த ஆராதனை எப்படி நடக்கவேண்டும், என்னென்ன பலிமுறைமைகள் என்பதை பற்றி விவரமாக எழுதப்பட்டிருக்கிறது. இந்த ஆராத னையின் சுருக்கத்தை பரிசுத்த அப்போஸ்தலனாகிய பவுல் எபிரேயரில் 7,8,9,10 அதிகாரங்களிலே இந்த ஆராதனைகளைப் பற்றி விசேஷமாக எழுதுகிறார்.

**“இவைகள் இவ்விதமாய் ஆயத்தமாக்கப்பட்டிருக்க, ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு முதலாங்கூடாரத்திலே நித்தமும் பிரவேசிப்பார்கள்." -எபிரேயர் 9:6.**

ஆசாரியர்கள் தினமும் பலியிடுவார்கள். யாத்திரையாகமம், லேவியராக மத்திலேயும், வருஷத்திற்கு ஒரு முறை விசேஷமான ஆராதனை நடக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆலயம் என்பது எதற்கு என்றால், தேவனுடைய பிள்ளைகள் தாங்கள்



பாவம் செய்தபோது, அந்த பாவத்தை பரிகரிக்கதக்கதாக அவர்கள் ஒரு ஆட்டு குட்டியையோ, அல்லது புறா குஞ்சுகளையோ, தெரிந்துகொண்டு ஆலயத்திற்கு கொண்டுவந்து, ஆசாரியனிடத்திலே ஒரு கத்தியும் கின்னத் தையும் வாங்கி, தாங்கள் பாவம் செய்ததற்காக அந்த ஆட்டு குட்டியின் தலையிலோ, அல்லது புறா குஞ்சுவின் தலையிலோ, தங்கள் கைகளை வைத்து, தங்களுடைய பாவத்தை அறிக்கை செய்வார்கள்.

அப்பொழுது அந்த கத்தியினாலே ஆட்டு குட்டியின் கழுத்தையோ அல்லது புறா குஞ்சுவின் கழுத்தையோ அறுத்து, அந்த இரத்தத்தை எடுத்து, பரிசுத்த ஸ்தலத்திற்கும், மகா பரிசுத்த ஸதலத்திற்கும், நடுவில் இருக்கும் திரைசாலையின்மேலே தெளித்து, அந்த தூபபீடத்தின் கொம்புகளிலே சிறிது பூசிவிட்டு வெளியே வந்து, மகனே நீ செய்த பாவம் உனக்கு மன்னிக்கப்பட்டுவிட்டது, இனிமேல் பாவம் செய்யாதே நீ போகலாம் என்று அவனுக்கு சொல்லி அனுப்பிவிடுவான். இப்படிதான் ஒவ்வொரு நாளும் நடந்தது.

## இதனுடைய அர்த்தம் என்ன?

**"நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது." -எபிரேயர் 9:22.**

ஒரு பாவம் மன்னிக்கப்படவேண்டுமென்றால், இரத்தம் சிந்த வேண்டும்.

## ஏன் ஆண்டவர் இரத்தத்தை மன்னிப்புக்காக கொடுத்தார்?

**"மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்;**

**ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே." - லேவி.17:11.**

பாவத்தின் சம்பளம் மரணம், அந்த மரணத்திற்கு ஈடு கொடுப்பது உயிர். ஆகவே இரத்தத்தில் உயிர் இருப்பதால், அந்த இரத்தத்தை சிந்தினால், அந்த உயிர் கொடுத்தமாதிரி. மனிதன் தன்னுடைய இரத்தத்தை சிந்தாதபடி, மிருகத்தின் இரத்தத்தை சிந்துகிறான். தன்னுடைய பாவத்தை மனிதன் ஒரு ஆட்டுக் குட்டியை பிடித்து வந்து, அதன் மேல் தன் பாவத்தை சுமத்தி அதை பலி கொடுக்கிறான். அதனால் அவன் பாவம் அந்த ஆட்டு குட்டிமேல் சுமக்கப்படுகிறது. அந்த ஆட்டுகுட்டியின் இரத்தத்தை அந்த ஆசாரியன், மகா பரிசுத்த ஸ்தலத்தின் திரைசீலையின் மேல் தெளிக்கும் போது, அந்த பாவம் அந்த திரைசீலைக்கு போய்விடுகிறது. அப்படியென்றால் அந்த பாவம் ஆண்ட வருடைய ஆலயத்தில் போய்விடுகிறது என்று அர்த்தமாகிறது. அதுதான்



மன்னிப்பு.

ஆண்டவர் அந்த பாவமன்னிப்பை ஏற்றுக்கொண்டதாலே அந்த பாவம் இவனுக்கு மன்னிக்கப்பட்டு விடுதலை கொடுக்கப் படுகிறது.

ரிக் வேதம் சொல்லுகிறது, பகவான் ஆட்டுகுட்டியாக உலகத்திற்கு வந்து இரத்தம் சிந்தவேண்டுமென்று. திருமறையும் அதேவித மாகதான் சொல்லுகிறது. ஆண்டவர் இந்த உலகத்தில் ஒரு ஆட்டுகுட்டியாக வருவார். நாம் செய்த பாவத்திற்கு இறைவன் பலியாகவேண்டும். நாம் மரிப்பதற்கு பதிலாக அந்த ஆட்டு குட்டி மரிக்கிறது.

எனக்காக ஒரு ஆட்டுகுட்டி சாகிறதே, அது கழுத்து அறுபட்டு, துடிதுடித்து, சாகும்போது வரும் பரிதாபம், பாவத்தின் மீது வரும் வெறுப்பு, வரவேண்டுமென்று நாம் உணர்ந்தவர்களாக, பாவங்களை விட்டு விலகவேண்டும் என்ற ஒரு பாடம்தான் அந்த மிருக பலி.

இறைவனும் இப்படிதான் மரிக்கவேண்டும் என்ற ஒரு பாடமும் அதில் அடங்கியிருக்கிறது.

**“மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி." -யோவான் 1:29.**

பிறகு ஏழாம் மாதம் பத்தாம் தேதியிலே, பாவ நிவாரண நாள் என்று ஒரு ஆராதனை நடத்தினார்கள். அந்த ஆலயத்திலே வருஷம் முழுவதும் பாவம் சுமத்தப்பட்டிருக்கிறது.

**அந்த பரிசுத்தஸ்தலம் எப்படி சுத்திகரிக்கப்படுகிறது?**

அன்று இஸ்ரவேல் ஜனங்கள் யாவரும் உபவாசமிருந்து சாப்பிடாமல் அந்த ஆலயத்திற்கு முன்பாக வந்து தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்து கொண்டிருப்பார்கள். அப்பொழுது ஆசாரியன் இரண்டு வெள்ளாட்டுகடாக்களை கொண்டு வந்து சீட்டு போட்டு, ஒன்று கர்த்தருடைய ஆடென்றும், இன்னொன்று போக்காடென்றும் வைப்பான்.

அந்த கர்த்தருடைய ஆட்டை வெட்டி அதனுடைய இரத்தத்தை எடுத்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டு போகிறான். இத்தனை நாட்களும் அந்த ஆசாரியர்கள் முதல் அறைக்கு மட்டுமே போவார்கள். அந்த ஆசாரியன் நன்றாய் சுத்தம்பண்ணிகொண்டு, பாவ அறிக்கை செய்து, வருஷத்திற்கு



ஒரு முறை அந்த மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு போவான். அங்கே போய் அந்த உடன்படிக்கை பெட்டியின்மீது அந்த ஆட்டுகுட்டியின் இரத்தத்தை தெளித்தான்.





வருஷ முழுவதும் சேர்க்கப்பட்ட அந்த பாவங்கள், அந்த உடன்படிக்கை, அவருடைய கற்பனைகளும், அவருடைய பிரசன்னமும் இருக்கிற அந்த பெட்டியின் மீது தெளித்து விடுவான். அப்பொழுது ஆண்டவர் அந்த பாவங்களை ஏற்றுக் கொண்டார் என்று



அர்த்தமாகிறது. அந்த ஆராதனைதான் பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படுதல் என்று சொல்லப்படுகிறது. அதை திருமறை அது ஒரு நியாயத்தீர்ப்பு நாள் என்று சொல்லுகிறது. அன்றைக்கு தன்னை தாழ்த்தாதவன் எவனோ, அவன் அறுப்புண்டுப் போவான் என்று வேதம் சொல்லுகிறது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவானவர், பரலோகத்திற்கு போகும்போது, அந்த திரைச்சாலை இரண்டாக கிழிந்துவிட்டது. இனி ஆட்டு பலி வேண்டியதில்லை. பூலோகத்திலே, தேவனுடைய ஆலயமும் இல்லை.

**"அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது; அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயின." –வெளி. 11:19.**

இந்த கடைசி நாட்களிலே, பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப் படவேண்டும். 2300 இராப்பகல் செல்லும், பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்று ஆண்டவர் சொன்னார். அந்த 2300 இராப்பகல் 1844 –ல் முடிகிறது.

**அந்த வருஷத்திற்கு பிறகு என்ன நடக்கிறது ?**

# தேவனுடைய பிள்ளைகளுக்கு நியாயத் தீர்ப்பு பரலோகத்திலே தொடங்கிவிட்டது.

என்று வேதம் சொல்லுகிறது. கர்த்தருக்குள் பிரியமானவர்களே! இங்கு அந்த நியாயத்தீர்ப்பு தொடங்கிவிட்டது என்ற அடையாளமாக ஒரு பெரிய தூது உலக மெங்கும் போய்கொண்டிருக்கிறது.

**“பின்பு, வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்; அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து, மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுது கொள்ளுங்களென்று கூறினான்." - வெளி. 14:6,7.**

இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வரும்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் அந்த நியாயத்தீர்ப்பு



முடியாவிட்டால் கிறிஸ்துவிற்குள் மரித்தவர்கள் யார்? பரிசுத்தவான்கள் யார்? என்று எப்படி தெரியும்? இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வருவதற்கு முன்பாக பரிசுத்தவான்களின் நியாயத்தீர்ப்பு முடிந்துவிடுகிறது.

1833–ஆம் ஆண்டிலிருந்து அநேக கர்த்தருடைய பிள்ளைகள் பலமாக ஆண்டவருடைய நியாயத்தீர்ப்பை பற்றி பிரசங்கிக்க ஆரம்பித்தார்கள்.

நார்வே ஸ்வீடன் போன்ற கத்தோலிக்க நாடுகளிலே, யாரும் பெரியவர்கள் எழுந்து பிரசங்கம் பண்ணகூடாது என்று ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அங்கு தலைவர் மட்டும்தான் பிரசங்கம் பண்ண வேண்டும். ஒரு நாள் சிறு குழந்தைகள் மேலே ஆவியானவர் வந்து, நியாயத்தீர்ப்பு வந்துவிட்டது என்று பெரிய பிரசங்கமாக செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

ஜோசப் வோல்ஃ என்பவர் 1833 –ம் ஆண்டு இந்தியாவுக்கு வந்து சென்னையில் செயின்பால் ஆலயத்திலே, ஆண்டவருடைய நியாயத் தீர்ப்பை பற்றி பேசினதாக இன்றைக்கும் அங்கு

எழுதப்பட்டிருக்கிறது. பரலோகத்தின் தேவன் பரிசுத்த ஆவியினாலே இந்த உலகத்திலுள்ள மக்களுக்கு நியாயத்தீர்ப்பின் வேலை வந்துவிட்டது என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார். இந்த தூது இன்று உலகமெங்கும் போய் கொண்டிருக்கிறது.

பரலோகத்திலே 24 மூப்பர்களுக்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், தேவதூதர்களுக்கு முன்பாகவும் நம்முடைய புத்தகங்கள் திறக்கப்பட்டு, அந்த நியாயத்தீர்ப்பு 1844–லிருந்து துவங்கப்பட்டுவிட்டது என்று தேவன் நம்மை எச்சரிக்கிறார்.

**“நான் பார்த்துக்கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப் பட்டது; நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார்; அவருடைய வஸ்திரம் உறைந்த மலையைப்போலவும், அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும் பஞ்சைப்போல துப்புரவாகவும் இருந்தது; அவருடைய சிங்காசனம் அக்கினிஜுவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது. அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்; நியாயசங்கம் உட்கார்ந்தது; புஸ்தகங்கள் திறக்கப்பட்டது." - தானி 7:9,10.**

திருமறை எவ்வளவு விளக்கமாக சொல்லிவிட்டது என்று பாருங்கள். மற்ற கிறிஸ்தவ மார்க்கத்திலே, இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வந்தபிறகுதான் நியாயத்தீர்ப்பு நடக்கும் என்று பேசி கொண்டிருக் கிறார்கள். இன்று நியாயத்தீர்ப்பிலே நுட்ப நியாய விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. ஆண்டவர் வந்தபிறகு தண்டனைகள் நிறைவேற்றப் படும். அவர் வருவதற்கு முன்பாக எல்லாம் முடிந்தது என்று சொல்லிவிடுவார்.



**“அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்." -வெளி.22:11.**

அவர் வருவதற்கு முன்பாக இந்த வார்த்தைகளை சொல்லிவிடுவார். அப்படி சொன்னால், எல்லாம் முடிந்தது இனி அவர் நியாயத்தீர்ப்பு கொடுப்பதுதான் மிச்சமாக இருக்கும். 1844 –ம் ஆண்டு இந்த உலகத்தின் நியாயத்தீர்ப்பு தொடங்கிவிட்டது.

**இந்த நியாயத்தீர்ப்பு யாரிடத்திலே துவங்குகிறது?**

**"நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?" - 1பேதுரு 4:17.**

அப்படியானால் இந்த நியாயத்தீர்ப்பு, ஆதாம் முதல் யார் ஆண்டவரை விசுவாசித்தார்களோ, அவர்களுடைய புஸ்தகங்கள் திறக்கப்பட்டு, அந்த நியாயசங்கத்திற்கு முன்பாகவும், கோடான கோடி ஜனங்களுக்கு முன்பாகவும் நியாயம் தீர்க்கப்படுகிறது.

ஆகவே அந்த வேலை எப்பொழுது முடியும் என்று யாருக்கும் தெரியாது. இன்று அந்த நியாயத்தீர்ப்பு தொடங்கி (1844–2006) 162 வருஷங்கள் ஆகிவிட்டது. நாம் அந்த நீயாயத் தீர்ப்பிலே எப்படி நிற்கபோகிறோம்? பரிசுத்தவான்களாகவா அல்லது துன்மார்க்கர்களாகவா? நம்முடைய புஸ்தகங்கள் திறக்கப்பட்டால் நம்முடைய கதி என்ன ஆவது? இந்த ஒரு பெரிய கேள்வி நம் இதயத்தில் வாசம் பண்ணவேண்டும்.

ஆண்டவர் சொன்ன தீர்க்கதரிசனங்கள் பொய்யாகாது. வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், என் வார்த்தைகள் ஒழிந்துபோகாது என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார். தீர்க்கதரி சனங்களை யாரும் ஒழித்து போடமுடியாதபடி காக்கப்பட்டிருக்கிறது. ஆண்டவர் சொன்ன தீர்க்கதரிசனங்கள் யாவும் துள்ளியமாக நிறைவேறிற்று.

நாம் தாமதிக்காமல் இன்றே மனந்திரும்பி பரிசுத்தமாவோம். நாளை நாளை என்று நாட்களை தள்ளிபோட காலமில்லை. இன்றே இரட்சண்ய நாள், இன்றே மனம்திரும்பும் நாள். நம் புஸ்தகங்கள் திறக்கப்பட்டால் நாம் ஆண்டவரிடத்திலே தவணை கேட்க முடியாது. கடைசி தீர்மானம் எடுப்போம். கர்த்தருக்கு பயந்து அவர் கற்பனைகளுக்கு கீழ்ப்படிவோம்.



தவணையின் காலம் 1844–ஆம் தொடங்கிவிட்டது. அது எப்பொழுது முடியும் என்று அறியாததினாலே விழித்திருக்கக்கடவோம்.

# இன்றைக்கு ஆவியானவர் நம்முடைய உள்ளத்திலே பேசுவாரானால் நம்முடைய

புஸ்தகங்கள் இன்னும்
எடுக்கப்படவில்லை என்று
அர்த்தம். அப்படி ஆவியானவர்
பேசாமல் நம்முடைய இருதயம்
ஒரு கற்பாறை போல
இருக்குமானால், நம்முடைய
புஸ்தகம் திறக்கப்பட்டுவிட்டது
என்று அர்த்தமாகும். ஏனென்றால்
நியாயத்தீர்ப்பு முடிந்தவுடனே
ஆவியானவர் நம்முடைய
உள்ளத்திலே கிரியை
செய்யமாட்டார். எப்போது
நம்முடைய புஸ்தகம் எடுக்கப்படும்
என்று நாம் அறியாததினாலே நாம்
விழித்திருப்போம்!
கவனமாயிருப்போம்!
காத்திருப்போம்! –ஆமென்.